# கிருமி கண்ட சோழன்

# Krimi Kanda Cholan - King Chola with a Diseased Neck

மு.கயல்விழி / M.Kayalvizhy [1]


## Abstract

"*Kirumi Kanda Cholan*" is the reference to the *Chola* king who died due to disease, which was believed to be caused by his maltreatments against *Vaishnavites* in his country during his reign. Some historians said that the *Chola* king was King *Adi Rajendra* while other sources quoted *Kulothuga Chola II* as the said king. As the king suffered an unnatural death caused by a disease (cancerous in nature though not diagnosed as such at the time), he was accorded the name "*Kirumi Kanda Cholan*". He was a strong advocator of *Shaivism* and was intolerant of *Vaishnavism*, which was also practiced by the people under his rule. To demonstrate his aversion towards *Vaishnavism*, he was said to take the extreme action of throwing the *Govindaraja Perumal* idol into the sea upon his clash with the priests in *Vaishnava* Temple in *Chitambaram*. This incident created tension among the *Vaishnavas* in *Chola* country; *Acharaya Ramanuja*, the main philosopher of *Vaishnavism* even migrated from *Chola* country to Mysore due to this inequal treatments. It should be noted that all *Chola* kings always were recorded to give their full support to every religion practiced in their country.



Date of submission: 2020-02-16
Date of acceptance: 2020-03-10
Date of Publication: 2020-07-20


Corresponding author's
Name: M.Kayalvizhy
Email: kayalarul22@gmail.com


**Keywords:** Krimi Kanda Chola, Adi Rajendra, Kulothungan II, Chidambaram Temple tension, Clash with Vaishnavas, Ramanujas migration, Cholas contribution to Vaishnavism.

### முன்னுரை

சோழர்கள் தமிழ் மன்னர்கள் ஆவர். எனவே அவர்கள் தமிழருக்கே உரிய சமயப் பற்றுடனும், சமயப் பொறையுடனும் திகழ்ந்தனர். சோழ மன்னர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்கள் பெரும்பாலும் காரணப் பெயர்களாகவே அமைந்தன. சான்றாக யானை மீதிருந்து போரிட்டு இறந்ததால் இராஜாதித்தச் சோழன் என்பவன் "யானை மீது துஞ்சிய தேவன்" என்றும், காஞ்சியில் உள்ள பொன் மாளிகையில் இறந்ததால் சுந்தர சோழன் "பொன் மாளிகைத் துஞ்சிய தேவன்" என்றும், சுங்கத்தை (வரி) நீக்கியதால் முதலாம் குலோத்துங்கச் சோழன் "சுங்கம் தவிர்த்தச் சோழன்" என்றும் அழைக்கப்பட்டனர். ஆனால் கிருமிகண்ட சோழன் என்று வழங்கப்பட்ட சோழனது பட்டப் பெயர் ஆய்வாளர்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியது. கிருமிகண்ட சோழன் யார் என்பதிலும், எதனால் அப்பெயர் வந்தது என்பதிலும் பெரிதும் கருத்து வேறுபாடு நிலவுகின்றது. எனவே இச்சிக்கலைத் தீர்த்து உண்மையையுரைப்பது இன்றியமையாத கடமையாகின்றது.

[1] The author is as an Assistant Professor in the Department of Tamil, Pacchayppas College for Women, Kancheepuram, Tamil Nadu. Email ID: kayalarul22@gmail.com

### கிருமிகண்ட சோழன்

கிருமி என்பது நோய். எனவே கிருமிகண்ட சோழன் என்பது நோய் வாய்ப்பட்டு மடிந்த சோழ மன்னனைக் குறிக்கும். தில்லையில் உள்ள கோவிந்தராசப் பெருமாள் கோவில் சிலையை பெயர்த்தெடுத்து கடலில் எறிந்த சோழ மன்னன் தான் செய்த தெய்வக் குற்றத்தால் நோய்வாய்ப் பட்டு மடிந்ததால் கிருமிகண்ட சோழன் என்று அழைக்கப்பட்டான் என்று ஆய்வாளர்கள் கருதுவர் (Neelakanta Sastri,1975, p.295). இவ்வாறு இறந்த சோழன் அதி இராஜேந்தின் (கி.பி.1070) என்றும், இரண்டாம் குலோத்துங்கச் சோழன் (கி.பி.113350) என்றும் ஆய்வாளர்கள் மாறுபடுவர். இச்செயலால் புண்பட்ட வைணவ ஆச்சாரியர் இராமனுஜர் தமிழ்நாடு நீங்கி மைசூர் சென்று வாழ்ந்தார் என்றும் உரைப்பர். இச்செய்திகளைத் திவ்ய சூரி சரித்திரம் மற்றும் கோயிலொழுகு போன்ற வைணவ இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன.

இந்நூல்களை அடிப்படையாகக் கொண்டு சில ஆய்வாளர்கள் இச்சோழன் வைணவத்தை அழிக்க முனைந்தான் என்றும், வைணவர்களைக் கொடுமைப்படுத்தினான் என்றும் சோழர்கள் மீது பழி சுமத்தினர். (பாலசுப்பிரமணியம், 1978, ஜீ.280) சோழர்கள் சமயப் பொறை யற்றவர்கள் என்று சேற்றை வாரிப் பூசினர். இக்கருத்து சார்ந்து திரைப்படம் ஒன்றும் வெளியாகி பெரு வெற்றியும் பெற்றது. இக்கருத்து பொற்காலச் சோழர்களின் நற்பெயருக்கு களங்கம் விளைவிப்பதாக அமைந்துள்ளது. எனவே தக்க ஆதாரங்களைக் கொண்டு உண்மையை வெளிப்படுத்துவது மிகவும் இன்றியமையாதது.

### சோழர்களின் சமயப் பொறை

சோழ நாட்டில் வைதீக சமயத்தின் பிரிவுகளான சைவம், வைணவம், காணபத்தரம், கௌமாரம், காளாமுகம் போன்றவற்றுடன் புற சமயப் பிரிவுகளான பௌத்தம் மற்றும் சமணமும் செழித்துக் காணப்பட்டன. சோழ மன்னர்கள் சமயப் பொறை மிக்கவர்கள். எனவே இவர்கள் நாட்டில் உள்ள அனைத்துச் சமயங்களையும் பாகுபாடின்றி ஆதரித்தனர். இவர்கள் பாரபட்சமின்றி அனைத்து சமய கோயில்களுக்கும் நிவந்தங்களை வாரிவழங்கினர். சோழ நாட்டில் சைவத்துக்கு அடுத்து வைணவமே சிறப்பிடம் பெற்றது. பல புதிய வைணவ ஆலயங்கள் சோழ மன்னர்களால் கட்டப்பட்டன. அவர்கள் வைணவத்தின் மீது தமக்கிருந்த பற்றுதலைக் காட்ட “வீரநாராயணன்” என்ற பட்டத்தையும் சூடிக்கொண்டனர் (சதாசிவ பண்டாரத்தார், 2008, ஜீ.311) மேலும் வைணவ இலக்கியமான “திவ்விய பிரபத்தங்கள்” இக்காலத்தில் தான் தொகுக்கப்பட்டன. பராந்தக சோழன், கண்டராதித்தன், குந்தவை, அதிராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன், விக்கிரம சோழன் போன்ற சோழ மன்னர்கள் எடுப்பித்த வைணவ ஆலயங்கள் இன்றும் அவர்களின் சமயப் பொறையை பறைசாற்றுகின்றன. மேலும் சோழ நாட்டில் எவ்விடத்திலும் சமயப் பூசல்கள் நிகழ்ந்ததாகச் சான்றுகளில்லை. எனவே சோழ மன்னர்கள் சமயப் பொறையாளர்கள் என்பதுடன் வைணவத்தையும் நன்கு ஆதரித்தனர் என்பது ஐயத்திற்கிடமின்றி புலனாகின்றது.

### சோழ மன்னர்களின் வைணவ எதிர்ப்பு

திவ்வியசூரி சரிதம் மற்றும் கோயிலொழுகு போன்ற வைணவ இலக்கியங்களைச் சான்றாகக் கொண்டு சில ஆய்வாளர்கள் கிருமி கண்ட சோழன் என்பவன் அதி ராஜேந்திரனே என்றும், அவன் வைணவத்தையும், வைணவர்களையும் அழிக்க முனைந்தனன் என்றும், இதனால் ஏற்பட்ட தோஷத்தால் அவன் நோயுற்று மடிந்தான் என்றும் உரைப்பர். மேலும் இச்செய்கையால் சோழ நாட்டில் உள்நாட்டுக் கலகம் வெடித்ததாகவும் அவர்கள் கருதுவர். நன்கு ஆராயுமிடத்து இக்கருத்து ஏற்புடையதாகத் தோன்றவில்லை. தஞ்சை மாவட்டம் கூகூரில் உள்ள கல்வெட்டு சோழன் அதிராஜேந்திரன் கி.பி 1073 இல் நோயுற்றுத் துன்புற்றான் என்று உரைக்கின்றது (A.R.E.No:280/1917). இந்நோயிலிருந்து அவன் மீளாமலே அகால

மரணமடைந்தான் என்பது தெளிவாகத் தெரிகின்றது. எனவே அவன் நோயினால் மரணமடைந்தான் என்று கொள்ள வேண்டுமே ஒழிய, வைணவத்தை அழிக்க முயன்று அதனால் மரணமடைந்தான் என்று கூறுவது சற்றும் பொருந்தாது.

மேலும் அவன் காலத்தில் நாட்டின் எவ்விடத்திலும் சமய பூசல்கள் நடந்ததாகச் சான்றுகளில்லை. அவன் நாட்டில் பல நல திட்டங்களை மக்களுக்கு சிறப்புடன் செயல்படுத்தினான் (ஷிமிமி.கூஷிஷீீ.3.ழிஷீ:57). உள்நாட்டுக் கலகம் நடக்கும் நாட்டில் நலதிட்டங்கள் செயல்படுத்தியிருக்க முடியாது. இது தவிர இவன் வைணவ சமயத்தின் மீது பற்று கொண்டவன் என்பது விழுப்புரம் மாவட்டம் திருவக்கரையில் உள்ள சந்திர மௌலீஸ்வரர் கோயில் வளாகத்தில் இவன் கட்டிய வரதராஜப் பெருமாள் கோவிலே சாலச் சிறந்த சான்று (கி.ஸி.ணி.ழிஷீ:205/1904). மேலும் இவன் துன்புறுத்தியதாகக் கருதப்படும் இராமானுஜர் இவருடைய காலத்திற்கு சாலவும் பிற்பட்டவர். எனவே அதிராஜேந்திரன் காலத்தில் வைணவர்கள் துன்புறுத்தப்படவில்லை என்பதுடன், உள்ளாட்டுக் கலவரத்தாலும் அவன் மடியவில்லை என்பதும் உறுதியாகின்றது. இயற்கையாய் மனிதருக்கு தோன்றும் நோயினால் அவன் மரித்திருக்க வேண்டும். அவன் காலத்தில் சைவத்தை போன்றே வைணவமும் செழித்து இருந்ததைச் சான்றுகள் உறுதிபடுத்துகின்றன.

அடுத்ததாக இரண்டாம் குலோத்துங்க சோழன் தில்லை நடராஜர் கோயில் திருப்பணி செய்யும் போது கோவிந்தராஜ பெருமாள் கோவிலில் உள்ள சிலையை பெயர்த்தெடுத்துக் கடலில் வீசினான் என்றும், இதனால் வைணவர்கள் அவன் ஆட்சி காலத்தில் துன்புற்றனர் என்றும் சிலர் கருதுகின்றனர் (பிள்ளை,1977, ஜீ.351) கி.பி 8 ஆம் நூற்றாண்டில் நந்திவர்ம பல்லவனால் நிறுவப்பட்ட கோவிந்தராஜனின் சிலையை யாது காரணத்தாலோ இவன் பெயர்த்து கடலில் எறிந்தான். இதைக் கீழ்கண்ட சமகால இலக்கியங்கள் உறுதி செய்யும்

*“தில்லைத் திருமன்றின் மூன்றிற் சிறுதெய்வத்*

*தொல்லைக் குறும்பு தொலைத்தெடுத்து”*

*(குலோத்துங்க சோழன் உலா:7778)*

*“பொன்னிற் குயற்றிப் புறம்பிற் குறும்பனைத்து*

*முன்னர்க் கடலகழின் மூழ்குவித்த சென்னி”*

*(இராஜராஜ சோழன் உலா:6566)*

*“மூன்றிற் கிடந்த கருங்கடல் போய்*

*முன்னைக் கடல்புகப் பின்னைத் தில்லை*

*மன்றிற் கிடங்கண்ட கொண்டன் மைந்தன்*

*மரகத மேருவை வாழ்த்தினவே”*

*(தக்கயாகப் பரணிதாழிசை :777)*

இவையாவும் சமகால இலக்கியங்கள் என்பதால் இச்செய்திகள் உண்மை என்று உணரலாம். மேலும் கல்வெட்டுச் சான்றுகளும் இதை உறுதி செய்யும் (A.R.E.No:36/1907). இதைக் கருத்தில் கொண்டு இவன் வைணவத்துக்கு எதிரியாகத் திகழ்ந்தான் என்றும் என்றும் கருதுவர் (இராஜமாணிக்கம் பிள்ளை, 2005, ஜீ.291) நன்கு ஆராய்ந்து பார்க்குமிடத்து குலோத்துங்க சோழன் மீது சுமத்தப்பட்ட பழிகள் யாவும் பொருந்தாதவையாகத் தோன்றுகின்றன. இதற்கான காரணங்கள் வருமாறு:

1. மூன்றாம் குலோத்துங்கனின் தந்தையும், பாட்டனும் வைணவ பற்றாளர்கள். அவ்வழியே நின்று இவனும் வைணவத்தை நன்கு ஆதரித்தான்.

2. இவன் வைணவர்களை கொடுமை புரிந்ததாக எவ்விதத் தொல்லியல் சான்றுகளும் இதுவரை கிடைத்தில.

3. “நெடு மாலிவனென நெடுமுடி சூடி” என்ற இவனது மெய்க்கீர்த்தி இவன் கொண்ட வைணவப் பற்றை குறிப்பிடும்.

4. இவன் வைணவ ஆலயங்களுக்கு நிவந்தங்களை அளித்து அச்சமயத்தின் மீது தனக்குள்ள பற்றை வெளிப்படுத்தினான். சான்று:திருக்கோவிலூர் கல்வெட்டு (A.R.E.No:*245/193435*).

5. குலோத்துங்கன் திருவரங்கம் கோயிலில் குலசேகர ஆழ்வார் பிரபந்தங்களையும், திருவாய் மொழியையும், திருப்பள்ளி எழுச்சியையும் பாட நிவந்தம் அளித்தது அவன் வைணவப் பற்றினைக் காட்டும்.

6. இவன் மீது குற்றம் சுமத்தும் திவ்விய சூரி சரித்திரம் மற்றும் கோயிலொழுகு போன்ற நூல்கள் இவன் காலத்திற்கு சாலவும் பிற்பட்டவை.

7. இவன் தில்லை கோயிலைத் தவிர பிற வைணவ கோயில்களை இடையூறு செய்ததாகத் தகவல்கள் இல்லை.

8. இவன் கோவிந்தராஜர் சிலையை கடலில் எறிந்ததன் விளைவாய் நாட்டில் கலகமோ, எதிர்ப்போ கிஞ் சித்தும் தோன்றவில்லை.

9. இவன் தில்லை கோயில் திருப்பணி செய்த போது அக்கோயிலில் உள்ள வைணவர்கள் பெரும் இடையூறு செய்தனர் என்று ஒட்டக்கூத்தர் மறைமுகமாகக் குறிப்பிடுகின்றார்.

10. இவன் கடலில் எறிந்த திருமால் சிலை மூலவர் சிலையன்று, உற்சவர் சிலையே.

11. இச்செயலின் விளைவாய் தமிழ்நாடு நீங்கிய இராமானுஜப் பெருமான் சோழனின் சமய விரோதம் குறித்து யாண்டும் குறிப்பிட்டிலர்.

12. இராமானுஜரின் புரட்சிகரக் கருத்தான தாழ்த்தப்பட்டவர்களும் பாகவதர்களாகலாம் என்பது சாதி ஆதிக்கம் உள்ள அக்காலத்துக்குப் பொருந்தவில்லை. எனவே வைணவ உயர் குலத்தவரின் கடும் எதிர்ப்பால் அவர் திருவரங்கத்தை விட்டு வெளியேறி திரு நாராயணபுரத்துக்குச் செல்ல வேண்டியதாயிற்று (நீலகண்ட சாஸ்திரி.க.அ.1979.ப:190) ஆனால் இந் நிகழ்வுக்கான பழி சோழர்கள் மீது சுமத்தப்பட்டது.

ஆனாலும் குலோத்துங்கன் கோவிந்தராஜர் சிலையை கடலில் எறிந்த செயல் உண்மையே என்று இலக்கியங்கள் உறுதி செய்கின்றன. அவன் தில்லைக் கோவிலில் திருப்பணி செய்து விரிவாக்கம் செய்ய முனைந்த பொழுது அக்கோயிலில் இருந்த வைணவர்கள் இவனுடன் முரண்பட்டு இவனை எதிர்த்திருக்க வேண்டும். இதனால் மன்னன் என்ற நிலையில் ஆத்திரமடைந்த சோழன் அவர்களைத் தண்டிக்க முனைந்து கோயில் சிலையை பெயர்த்தெடுத்து கடலில் எறிந்திருக்க வேண்டும். இக்கருத்தை உறுதி செய்த ஒட்டக்கூத்தர்

"மன்னிற்கு இடம் காண வேண்டி திருமாலை

தன் பழைய இடமான கடலுக்கே அனுப்பினான்"

என்று உரைக்கின்றார். ஆனால் என்னவிதமான இடையூறை வைணவர் இவனுக்களித்தனர் என்று இன்று வரை விளங்கவில்லை.

சமயப் பொறையும், தெய்வப் பற்றும் மிக்க சோழர் வம்சத்தில் வந்த குலோத்துங்க சோழனே ஆத்திரப்பட்டு தெய்வச்சிலையை கடலில் எறியுமளவுக்கு துணிந்தான் என்றால் அவ்வைணவர்கள் செய்தது அடாத செயலாக இருந்திருக்கும் என்பது உறுதி. இருந்த போதிலும் இச்செய்கையால் மனம் நொந்த இராமானுஜ ஆச்சாரியார் தமிழகம் நீங்கி மைசூர் பொந்தார். மேலும் மன்னனின் இச்செயல் சோழ நாட்டிலிருந்த வைணவர்கள் மனதில் ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியது. இதை இவனது மகனான இரண்டாம் இராஜராஜ சோழன் உணர்ந்து சரிசெய்தான் என்பதை

"விழுந்த அரி சமயத்தையும் மீளவிடுத்து" என்ற அவனது மெய்க்கீர்த்தி புலப்படுத்தும் (சோழர் வரலாறு.2000.ப:315). எனவே தில்லை கோவிந்தராசர் சிலை கடலில் எறிந்த நிகழ்வு ஒரு

தற்செயல் நிகழ்வென்பதும் வைணவர்களை அழிப்பதற்கோ, வைணவத்தை ஒருப்பதற்கோ சோழ மன்னன் யாதோரு முயற்சியும் மேற் கொண்டிலன் என்பதும் சான்றுகள் மூலம் நிருவப்படுகின்றது. சோழர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் யாவும் உண்மையன்று என்பதும் உறுதியாகின்றது.

## முடிவுரை

சோழ மன்னர்கள் பரந்த சமய நோக்கும், சமரச நற்குணங்களும் ஒருங்கேக் கொண்டவர்கள். பிற சமயத்தைப் போற்றும் பண்பாளர்கள். இதை அவர்கள் அளித்த நிவந்தங்களிலிருந்தும், எழுப்பிய கோயில்களிலிருந்தும் அறியலாம். ஆனால் அவர்கள் பிற சமயத்தவரை துன்புறுத்தினர் என்ற குற்றச்சாட்டை ஆய்வாளர்கள் முன் வைக்கின்றனர். கிடைக்கும் சான்றுகளைக் கொண்டு நன்கு ஆராயும் போது அதன் பொய்மை நன்கு புலனாகும். தனிப்பட்டச் சமயச் சச்சரவுகள் மதசாயம் பூசப்பட்டு அவர்கள் மீது வீண்பழியும் சுமத்தப்பட்டது. அக்காலத்தில் சைவ, வைணவ பிரிவுகளுக்கிடையே ஏற்பட்ட ஆதிக்கப் போட்டியே இச்சச்சரவுகளுக்கு அடிப்படைக் காரணமாய் அமைந்தது. சோழர்களின் நீண்ட கால ஆட்சியை நன்கு உற்று நோக்குகையில் அவர்கள் சமரச சமய நோக்குடையப் பண்பாளர்களாகத் திகழ்ந்ததை தெற்றென அறியலாம். இந்தியாவில் ஆண்ட பிற அரசு மரபினருடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் பிற சமயங்களை ஆதரிப்பதிலும், அவற்றை போற்றுவதிலும், சமய சமரசத்தை பின்பற்றுவதிலும் சோழர்களுக்கு நிகர் ஒருவரும் இலர்.

## Abbrevations

1. ARE-Annual Report on Indian Epigraphy
2. SII-South Indian Inscriptions

## Reference

Balasubramaniam, Ma. (1979). Sozhargalin Arasiyal Kalachara varalaru. Chennai Tamilnaddu Padanul Niruvanam.

Neelakanta Sastri.K.A,(1939), Studies in Cola History and Administration, Chennai: University of Madras, Chennai.

Neelakanta Sastri.K.A,(1975), The Cholas, Chennai: University of Madras,

Nilakanda Sastri, K., A. (1979). Theninthiya Varalaru. Chennai Tamilnaddu Padanul Niruvanam.

Pillai K., K. (1977). Tamil Nadu Varalarum Makkalum, Panbadum. Chennai Tamilnaddu Padanul Niruvanam.

Pillai K., K. (1997). Sozhar Varalaru. Chennai Tamilnaddu Padanul Niruvanam.

Rajamanikam Pillai, Ma. (2005). Sozhar Varalaru. Chennai: Puuram Pathipagam.

Sathasivap Pandarathar, T., Vai. ( 2008). Pirkala Sozhar Saritham. Chidambaram: University of Annamalai.

Sozhar Varalaru. (2000). Chennai Tamilnaddu Padanul Niruvanam.